# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி–27 | 09–04–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –051



நேர்த்திருந்தன் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்
யாழ் சாலை,
கிளிநொச்சி. (சி-9440)

R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.


# புலிகளுடன் விரைவில் பேச யோசிக்கின்றோம்

# இவ்வாறு கூறுவதால் மட்டும் பயனில்லை!

## த.தே.கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன்



(கொழும்பு)

**"விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்பது வரவேற்கத்தக்கதொரு கருத்து. ஆனால் பேச யோசிக்கிறோம் எனச் சொல்வதில் மாத்திரம் எதுவும் தங்கியிருக்கவில்லை'' இவ்வாறு பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டியில்இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

மேலும் அவர் தெரிவிக்கையில்; பேச்சுக்கள் முறையான வகையில் ஆரம்பிக்க வேண்டும். அந்தப் பேச்சு வார்த்தை என்னமாதிரி அமையப்போகின்றது எதைப் பற்றிப் பேசப்போகின்றார். தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு இடைக்கால சுயாட்சி அமைப்பு சம்பந்தமான நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றார்கள். வடக்கு-கிழக்கைப் பொறுத்த மட்டில் சகல அதிகாரங்களுடன் இடைக்கால சுயாட்சி அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டியது ஒரு அத்தியாவசியமான தேவையானபடியால் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானதாக, தமிழ்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான சபை அமைப்பு

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நேற்று சமாதான சபைஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் தலைவராக பெல்லன்வில் விவகார அதிபர் பெல்லன்வில் தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டில் வன்செயல்கள் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள வன்செயல்களைநிறுத்துவதற்கும் நாட்டில் இன,மத பேதமின்றி யாவரும் இலங்கையர் என்ற வகையில் வாழ்வதற்கு இந்த சபை நடவடிக்கை எடுக்கும் என சந்திரிகா தெரிவித்துள்ளார்.

## வாகனம் தடம்புரண்டது

பரந்தன் முல்லை வீதியில் தர்மபுரம் சந்திக்கு அருகாமையில் கன்டர் வாகனமொன்று தடம்புரண்டது. பரந்தன் நோக்கி வந்து கொண்டு இருந்த கன்டர்ரக வாகனம் தடம்புரண்டு குடைசாய்ந்த போதிலும் சாரதி சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர்தப்பினார். வீதியால் வந்த பாதசாரிகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

இச்சம்பவத்தில் வாகனம்பலத்த சேதத்திற்கு உள்ளாகியதுடன்

(IV ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சியில் முகமூடி அணிந்தோரால்

## தமிழ்க்கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கு நள்ளிரவில் கொலைப் பயமுறுத்தல்

வடமராட்சி கரையோரக் கிராமங்கள் உள்ளிட்ட பல பகுதிகளிலும் இரவுவேளையில் வாகனங்களில் செல்லும் சிலர் தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கு கொலை மிரட்டல்கள் விடுத்துள்ளனர்.

ஹைஏஸ் வாகனம், ஓட்டோ ஆகியவற்றில் செல்லும் முகமூடி அணிந்த ஆயுததாரியர் சிலரே இவ்வாறு மிரட்டித் திரிவதாகக் கூறப்படுகின்றது. படையினரது முகாம்கள் மற்றும் காவலரண்கள் அமைந்துள்ள பகுதிகளில் இக் கும்பல் வாகனங்களை நிறுத்திவிட்டு மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாகச் செயற்பட்ட சில ஆதரவாளர்கள் வீடுகளுக்கு நேற்று நள்ளிரவு வேளை சென்று மேற்படிக் கும்பல்களே கொலைப் பயமுறுத்தல்களை விடுத்துள்ளது.

வடமராட்சி வடக்கின் வியாபாரிமூலை மற்றும் வல்வெட்டித் துறைப் பகுதிகளிலும் அதேபோன்று துன்னாலைப்பகுதியிலும் இவ்வாறு கொலைப் பயமுறுத்தல் விடுக்கும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான மர்ம வாகனங்களது நடமாட்டம் வடமராட்சி மக்களிடையே பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## ஈ.பி.டி.பி.யின் அடாவடிக்கு கூட்டமைப்பு ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மீது ஈ.பி.டி.பி.யினர் நடத்தி வரும் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் யாழ்.மாவட்ட மக்கள் ஈ.பி.டி.பி.யினரின் கருத்துக்களை நிராகரித்து தமிழ் மக்களது அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டு புலிகளின் ஆதரவுடன் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கே தமது பேராதரவை வழங்கி வெற்றியீட்ட வைத்தனர்.

இதனால் காழ்ப்புணர்வு கொண்டுள்ள ஈபிடிபியினர் கூட்டமைப்பு ஆதர

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவருடன் மகிந்த ராஜபக்ச சந்திப்பு

சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ச நேற்று அமெரிக்க தூதுவரைச் சந்தித்து எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.இலங்கை மற்றும் பிராந்திய அரசியல் காரணிகள் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய அரசாங்கத்துடன் தமது நாடு இணக்கமுடன் செயற்படத் தயாராகவுள்ளதாக இந்த சந்திப்பின்போது அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார். முன்னதாக புதிய பிரதமர் மகிந்த

(IV ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ம.சு.மு. அமைச்சரவை நாளையே பதவி ஏற்கும்

### – லொக்கு பண்டாரசபாநாயகராக சிபார்சு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரவை நாளை பதவியேற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 32அமைச்சர்கள் தமது பதவிகளை ஏற்றுக்கொள்ளவுள்ளனர் இதில் 4 பேர்மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களாவர் இன்றைய தினம் இந்தப்பதவிப்பிரமாணம் மேற்கொள்ளப்படவிருந்த போதும் பெரிய வெள்ளி என்பதால் அது நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய தேசிய கட்சி டபிள்யு ஜே. எம். லொக்கு பண்டாரவை பரிந்துரைக்கப்படவுள்ளது.(32)

## சட்டவிரோதமாக படகில் இத்தாலி செல்ல முயற்சித்தோருக்குச் சிறை

சட்ட விரோதமாக இத்தாலிக்கு செல்ல முயன்ற குற்றத்தை ஒப்புக் கொண்ட 26 பேருக்கு கொழும்பு பிரதம நீதவான் சிரோமினி விஜயவர்த்தன ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையையும் தலா ஐம்பதாயிரம் ரூபாய் அபராதத்தையும் நேற்று விதித்தார். இந்த நபர்கள் கடந்த வருடம் நவம்பர் மாதம் 28ஆம் திகதி சட்ட விரோதமாக இத்தாலிக்குச் செல்ல முற்பட்டபோது சிறி லங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அபராதத்தை செலுத்தத்தவறும் பட்சத்தில் மேலும் மூன்று மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் ஏற்கனவே தடுப்புக்காவலில் இருந்த காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட காலத்தில் குறைக்கப்படும் என்றும் நீதவான் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளுடன் எந்தவொரு உடன்படிக்கையையும் அரசு செய்தால் நாம் அதை எதிர்ப்போம்

### ஜாதிகஹெல உறுமய அறிவிப்பு

சனாதிபதி புலிகள் அமைப்புடன் எவ்வகையானதொரு உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்ளும் நோக்கில் பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டால் நாம் அதனை முற்றாக எதிர்ப்போம் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சனாதிபதிதமிழீழ விடுதலைப்புலிகளுடன் எந்த நோக்கத்தில் பேச்சு நடத்த முற்படுகிறார் என்பது குறித்து நன்கு ஆராயப்படவேண்டும்.

அதேவேளை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மட்டும் சனாதிபதி பேச்சுக்களை நடத்தக்கூடாது தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்களுடனான வட்டமேசை மாநாடு ஒன்று நடத்தப்படவேண்டும் என்றும் ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது.

### ஐ.ம.சு.மு. தேசியப்பட்டியலில் மாற்றம்

## ரத்வத்த, ரட்ணசிறிக்கு தேசியப் பட்டியலில் இடம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியலில் மாற்றங்கள் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமசிங்க, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்த ஆகியோருக்கு வாய்ப்பை வழங்கும் வகையிலேயே இந்த மாற்றம் மேற கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே, அந்தக் கட்சி 13 பேரைக் கொண்ட தேசிய பட்டியலை

(IV ஆம் பக்கம் பார்க்க)

### அமெ. காங்கிரஸ் உறுப்பினர் வருகை

அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர்கள் இலங்கை வரவுள்ளனர் இவர்களின் விஜயம் எதிர் வரும் வாரத்தில் இடம்பெறவுள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சிகல உறுமயவின் பா.உ.கள் பட்டியலில் ஆனந்தசங்கரிக்கு இடமளிக்க விருப்பம்

### ஒருவர் பதவி விலகி வழங்கப்படுமாம்

யாழ்ப்பாணத்தில் சுயேட்சையாக நின்று கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரிக்கு தமது நாடாளுமன்ற உறுப்பினர் பட்டியலில் இடமளிப்பது குறித்து ஜாதிக ஹெல உறுமய ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினரான உடுவே தம்மாலோக தேரர் தகவலளிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ளாத ஆனந்த சங்கரி யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட போதும் அதில் தோல்வியடைந்தார். இந்த நிலையில் ஆனந்தசங்கரியின் கொள்கை வரவேற்கத்தக்கது எனக் கூறியுள்ள உடுவே தம்மாலோக தேரர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் 9 பேரில் ஒருவரை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஆனந்தசங்கரியை உள்ளீர்ப்பது குறித்து ஆராயப்படுவதாகத் தெரிவித்தார். இதேவேளை, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு வார்த்தையை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மாத்திரம் சனாதிபதி நடத்துவாராக இருந்தால் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (32)

## வரிவிளம்பரம்

**வேந்தன் பல்கட்டும் நிலையம்**
**கிளிநொச்சி**

பல்கட்டுதல், மிதப்பு பற்களுக்கு கிளிப் போடுதல் என்பவற்றை சிறந்த முறையில் செய்துகொள்ள மத்திய கல்லூரி மைதானம் முன்பாக வேந்தன் பல்கட்டும் நிலையம், யாழ். கண்டி சாலை, ஆனந்தபுரம்.

(4359)


## தவறிவிட்டது

கடந்த 31.03.2004. அன்று முல்லைத்தீவிற்கும், புதுக்குடியிருப்புக்குமிடையில் சுற்றாடல் உத்தியோகத்தர் இ.கருணைவேல் என்பவரது அலுவலக அடையாள அட்டை தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் முல்லைத்தீவு கச்சேரியிலோ அல்லது முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலே ஒப்படைக்கவும்.

(4012)

# இரணை மடுக்குள பயிற்செய்கைக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இரணைமடுக்குள பயிர்ச்செய்கைக் கூட்டம் நாளை 10.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்புக்களை தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட கமக்கார அமைபபுக்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.மனோகரன் வேண்டியுள்ளார்.

(சோ)

## - கிளி.மாவட்டத்தில் -

# சிறந்த கால்நடை வளர்ப்பாளர் தெரிவுசெய்யும் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2004ம் ஆண்டுக்கான சிறந்த கால்நடைப் பண்ணையாளர்கள் தெரிவு (ஆடு, மாடு, கோழி வளர்ப்பு) இடம்பெறவுள்ளது. மேற்படி தெரிவிற்கான விண்ணப்பப் படிவங்கள் கிளிநொச்சி கால்நடை வைத்தியர் அலுவலகத்திலும்,பூநகரி கால்நடை வைத்தியர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாமெனவும் விண்ணப்ப முடிவு திகதி 23.04.2004. எனவும் கிளிநொச்சி, பூநகரி கால்நடை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

(சோ)

# விவசாய உள்ளீடுகள் குறித்து கருத்தரங்கு

(ஒட்டுசுட்டான்)

விவசாய உள்ளீடுகள் பற்றிய கருத்தூட்டல் நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி மாலை 1.30 மணியளவில் நெடுங்கேணி மகாவித்தியாலயத்திலும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாலை 4.45 மணியளவில் கற்சிலைமடு அ.த.க பாடசாலையிலும் நடைபெற்றது.

வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவன பொது மேலாளர் சி.புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மல்டிபிளெக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானி குமாரவடிவேல் கர்நாடகமாநிலத்திலிருந்து வருகை தந்து கருத்தூட்டல்களை மேற்கொண்டார்.

(05)

# மட்டு-கல்முனை வீதியில் போலிசார் தொடராக நிறுத்தம்

(அலுவலக செய்தியாளர்)

மட்டு-கல்முனை வீதியில் நேற்று சிறிலங்காப் பொலிசாரல் பலத்த பாதுகாப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது. மட்டக்களப்பிலிருந்து கல்முனை வரையான வீதியில் குறிப்பிட்ட தூரத்திற்கு ஒருவராக வீதி நெடுகிலும் பொலிசார் நிறுத்தப்பட்டுள்ளனரெனவும் இவ் வீதியினூடாகப் பயணிக்கும் முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்துருளிகளில் பயணிப்பவர்கள் இடையிடையே மேற்படி பொலிசாரால் தடுத்து சோதனை மேற்கொள்ளப்பெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

(சோ)


## புதுக்குடியிருப்பு

## வணிகர் கழகத்தின் விசேட அறிவித்தல்

*மக்களின் நலனைக்கருத்தில் கொண்டு புதுவருட தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 10.04.2004 சனிக்கிழமையும் 11.04.2004 ஞாயிற்றுக்கிழமையும் புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்துக்குட்பட்ட சகல வணிகநிலையங்களும் முழுநாளும் திறந்திருக்கும் என்பதை அன்பார்ந்த மக்களுக்கு அறியத்தருகின்றோம். அத்துடன் எமது புதுவருட வாழ்த்துக்களையும் எம் இனிய மக்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.*

**வணிகர் கழகம்,**
**புதுக்குடியிருப்பு.**

(சி.7179)



*கிளிநொச்சி மாவட்ட, வடமராட்சி கிழக்கு பகுதி உறவுகளுக்கு*

# எனது உளமார்ந்த நன்றிகள்



அண்மையில் நடைபெற்ற 13வது பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக வேட்பாளராக பங்குகொண்ட எனக்கு தங்களது ஏகோபித்த ஆதரவை நல்கி அதிகப்படியான விருப்பு வாக்குகள் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்துள்ளீர்கள்.

இந்த மாபெரும் வெற்றிக்கு தோள் கொடுத்த குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட, வடமராட்சி கிழக்கு பிரதேச பொதுமக்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள், இரண்டாம் படி கூட்டுறவு நிறுவனங்கள் பொது அமைப்புக்கள் அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள், மற்றும் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கி.சிவநேசன்**

(சி-9438)



# வெளிக்கள அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது

முல்லை மாவட்ட சி.க.கூ. சமாசத்தின் மூலம் வெளிக்கள அலுவலகர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது தகுதியுடையவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட முழுமையான விபரங்களைக் கொண்ட விண்ணப்பத்தின் மூலம் எதிர்வரும் 2004-04-15ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ தலைவர், முல்லை மாவட்ட சி.க.கூ.சமாசம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் வெளிக்கள அலுவல்கள் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட வேண்டும் விண்ணப்பத்துடன் கல்வித் தகைமை சான்றிதலின் புகைப்படப் பிரதியை இணைத்து அனுப்பவேண்டும் 2004.04.15ம் திகதியன்று 21 வயதை பூர்த்தி செய்திருப்பதுடன், 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் கூட்டுறவுப் பணியாளருக்கு இவ் வயதெல்லை பொருத்தமற்றது. தகுதியற்ற விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக்கென அழைக்கப்படமாட்டது.

| | | |
|---|---|---|
| **பதவி** | :- | வெளிக்கள அலுவலர் |
| **சம்பளக்குறியீடு** | :- | 209/13 |
| **சம்பள அளவுத்திட்டம்:-** | | 31/99 இன் படி<br>5250.00-75X10-80X10-6800.00 |

**தகைமைகள் :-**

அ) வெளிக்கள வேலை சம்பந்தமான இரு வருட துறைசார் பயிற்சியினை அங்கிகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனமொன்றில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ) க.பொ.த (சாதாரண தரம்) வில் கணிதம்/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம், சிங்களம்/தமிழ்பாஷை உட்பட 04 திறமைச்சித்திகள் உட்பட 06 பாடங்களில் 02 தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் சித்தியும், கூட்டுறவுச் சங்க வெளிக்கள அலுவலகர் பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**நிபந்தனைகள்:-**

01. மாவட்டத்தின் எப்பாகத்திலும் கடமையாற்ற வேண்டும்.
02. பிணைப்பணம் ரூபா.25000/= செலுத்தல் வேண்டும் கடமைபொறுப்பேற்கும் போது ரூபா 10000/= உடன் செலுத்தி பின் தவனை முறையில் செலுத்தலாம்.
03. "மூன்று வருடங்களுக்கு விலகிக் கொள்ள மாட்டேன்" எனும் இறுக்கமான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.
04. கூ/வு வேலையாளர் ஆணைக்குழுச் செயலாளரின் பெயர் குறித்த நியமனம் கிடைக்கும் வரை இப்பதவி தற்காலிகமானதாகும்.

**குறிப்பு:-**

தற்போது கரைதுரைப்பற்று உ.அ.அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடமையாற்றக் கூடிய பொருத்தமான ஒருவரே நியமனம் செய்யப்படுவார்.

*தகவல்:-* **மாவட்டச் செயலாளர்,**
**இ.யோசேப்ஸ்ரலின்,**
**முல்லைமாவட்ட சி.க.கூ.சமாசம்,**
**வித்தியாபுரம், ஒட்டிசுட்டான்.**

(சி.7180)



**மலரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு**

# தமிழீழ வைப்பகத்தின்

## வியத்தகு வெகுமதிகள்

*அமுதம் சிறார் தேட்டக்கணக்கில் 14.04.2004 ஆம் நாளில் உரூபா 10,000/= இற்கு மேற்பட்ட தொகையினை வைப்புச் செய்யும் சிறார்களுக்கு,*



- வைப்புத் தொகையின் 10% உபகாரப்பணம் (BONUS)
- மேலும் பெறுமதிமிக்க விருப்பத் தெரிவுப் பரிசுப்பொதிகள்








தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-9361)

# 50 வருடங்களுக்கு மேலாக கோரி நின்ற அரசியல் வேட்கையை அடைய உழைப்போம்

## தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பினர் உறுதி

(கொழும்பு)

50 வருடங்களுக்கு மேலாக கோரி நின்ற அரசியல் வேட்கையை அடைவதற்கு எந்தவித சந்தேகங்களுக்கு அப்பாலும் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களுக்கு இடமின்றியும் உழைப்பதற்கு உறுதி பூண்டுள்ளோம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றோம் என கொழும்பில் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும்,

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு, யுத்தம் நிறுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலை இதுவரை எட்டவில்லை. மேற்குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்கு போதிய ஆட்சி, அதிகாரங்களுடன் கூடிய ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார அமைப்பு இன்றியமையாதது.

விடுதலைப்புலிகளால் 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட திட்டவரைபின் அடிப்படையில் தமிழ்மக்களின் ஏகோபித்த உண்மையான பிரதிநிதிகளாகிய விடுதலைப்புலிகளுடன் தாமதமின்றி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டுமென்று இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பெயரிலும், அதன் சின்னத்திலும் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் கோருகின்றோம்.

கடந்த பொதுத்தேர்தலில் எதுவித ஐயத்திற்கும் இடமின்றி வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எமக்கு அளித்த ஆணையின் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் விசேடமாக சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் வடக்கு, கிழக்கில் விரைவில் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் முழுமனதுடன் செயற்படுவோம்.

தமிழ் மக்களுடைய துயரங்களும், துன்பங்களும் தொடர முடியாது என்றும், அவற்றுக்கு உடனடியாக ஒரு முடிவு காணப்படவேண்டும் என்றும் நாம் வலியுறுத்தி நிற்கிறோம்.

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் பெயரில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம், தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த வடக்கு, கிழக்கு பிராந்தியத்திற்கு சுயாட்சி வழங்கப்படவேண்டுமென கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக கோரிநின்ற அரசியல் வேட்கையை அடைவதற்கு எவ்விதமான சந்தேகங்களுக்கு அப்பாலும் எவ்விதமான மாற்றக்கருத்துக்களுக்கு இடமின்றியும், உழைப்பதற்கு உறுதிபூண்டுள்ளோம் என்பதை தெளிவுபடுத்துகின்றோம்.

இதனையே நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் எவ்வித கேள்விகளுக்கும் இடமில்லாமல் எமது தமிழ் மக்கள் தீர்க்கமான முடிவாக வெளிப்படுத்தியுள்ளமை உணர்ந்து, அந்த அரசியல் அபிலாசையை அடைவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு உறுதிபூண்டுள்ளோம்.

ஓர் இடைக்கால அல்லது இறுதித் தீர்வில் வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம் சகோதாரர்களின் அபிலாசைகள், அவர்கள் திருப்தியடையக் கூடிய வகையில் தீர்க்கப்படவேண்டும் என்பதிலும் வடக்கு,கிழக்கில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் நீதி வழங்கப்படவேண்டும் என்பதிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அக்கறை கொண்டுள்ளோம். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நந்தனமென்டிஸ் தெரிவு

(கொழும்பு)

மேல்மாகாண முதலமைச்சராக நந்தன மென்டிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் றெஜினோல்ட் குரே பாராளுமன்றத்திற்குத் தெரிவானதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே நந்தன மென்டிஸ் நியமிக்கப்படவுள்ளார்.

## கூட்டம்

பாண்டியன் குளம் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கான கூட்டம் எதிர்வரும் 14.04.2004. மாலை 4மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதால் சகல கழகங்களையும் கலந்துகொள்ளுமாறு விளையாட்டுதுறை உத்தியோகத்தர் கமாதவ ஜெயரதாஸ் தெரிவிக்கின்றார். (24)

## ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் 13 ஆம் திகதி வரை நடத்தத் தடை

(கொழும்பு)

ஊர்வலங்களும் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளும் இம்மாதம் 13 ஆம் திகதி வரை சிறிலங்கா பொலிசாரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளை நிலைநாட்டும் நோக்கில் குறித்த இக்காலப்பகுதியில் இத்தடையுத்தரவு அவசியம் என்று சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அமைச்சரவை அங்கத்தவர்கள் நியமிக் கப்படவுள்ளார்கள். இவ்வேளையில் கூட்டங்களையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் பிராந்திய மட்டத்தில் மேற்கொள்ள சிலகுழுவினர் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இதனடிப் படையிலேயே இத்தடையுத்தரவு பிறப்பிக் கப்படுகிறது. என பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

## பேச்சில் காணப்படும் முடிவு கருத்துக்கணிப்பிற்கு விடவேண்டும்

### நீதி ஆணைக்குழு உறுப்பினர்

அரசியல் யாப்பு சீர்திருத்தப்பிரேரணையில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான தெளிவற்ற விடயங்கள் பற்றி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என நீதி ஆணைக்குழுவின் உறுப்பினர் கலாநிதி ஜெயதிஸ்ஸ கொஸ்ரா தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தையின் முடிவில் காணப்படும் தீர்மானங்களை மீளதயாரித்து அதை கருத்துக்கணிப்பின் மூலம் மக்களின் அங்கீகாரத்தைக் கோர வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார்.

## ரணிலின் புதிய அரசியல் முறையை மக்கள் புரிந்து கொள்ளவில்லை

### கவலையுடன் தெரிவிக்கிறார் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

எமது நாட்டில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அனைத்தும் தமது ஆதரவாளர்களுக்கு வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தன. சலுகைகளை வழங்கின. இதனை மாற்றியமைத்து புதியதொரு அரசியல் கலாச்சாரத்தை நாட்டில் ஏற்படுத்தி சமாதான சூழலை தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தினார். ஆனால் மக்கள் இதனைப் புரிந்துகொள்ளவில்லை.

இவ்வாறு முன்னாள் காணி அமைச்சர் ராஜி சேனாரத்ன கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் மக்களுக்கு வாக்குறுதிகளை அளித்து நாம் ஆட்சிக்கு வந்தோம். ஆனால் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. இதனால் தெண்பகுதியில் பெரும் தோல்வியைத் தழுவினோம். எமக்கும் அரசாங்கம் அமைக்க முடியும். ஆனால் மக்கள் தீர்ப்பை மாற்றியமைக்க விரும்பவில்லை.

எதிர்வரும் 22 ஆம் திகதி இரண்டு மத்தியஸ்தானங்கள் உருவாகப் போகின்றன. ஒன்று அரச பலம் இன்னொன்று பாராளுமன்றப் பலம். சபாநாயகர் பிரதிசபாநாயகர் குழுக்களின் பிரதித்தலைவர்கள் பதவிகளைப் பெற்றுக்கொண்டு பாராளுமன்றத்தை நாமே வழிநடத்துவோம். நேரம் வரும் வரை நாடி பிடித்துப்பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

நாம் இன்று வருவோம். நாளை போவோம். இன்று நாம் தோற்கலாம் நாளை வெல்வோம். அந்த நேரத்தில் எமது தலைவரிடம் மீண்டும் எனக்கு காணி அமைச்சை வழங்குமாறு கேட்பேன். உலக வங்கியின் ஆலோசனைகளையும் நிராகரித்து காணி மதிப்பீட்டை மேற்கொண்டோம்.

யார் காணி அமைச்சராக வந்தாலும் பெரும் சவால்களை சமாளிக்கவும், முகம் கொடுக்கவும் நேரிடும் என்று அவர் கூறியுள்ளார்.

## ஹக்கீம் - ரணில் பேச்சு

## தே. பட்டியல் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு சேர வேண்டிய தேசியப்பட்டியல் ஆசனங் கள் தொடர்பில் கட்சித்தலைவர் ரவூப்ஹக்கீம் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை ஹக்கீம் சிறிலங்காவிற்கான நோர்வேத்தூதுவர் கான்ஸ் பிறஸ்க்கர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் ஆகியோருடன் தனது இல்லத்தில் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்துள்ள சிக்கல்கள் மற்றும் தற்போதைய ஸ்திரமற்ற அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற சி.மு காங்கிரசின் உயர்பீட கூட்டத்தில் சனாதிபதி கூறியபடி பாராளுமன்றம் ஒரு அரசியல் நிர்ணய சபையாக செயற்பட்டு அதன் மூலம் அரசியல் யாப்பு சீர்திருத்தம் செய்யப்படும் பட்சத்தில் சிறுபான்மை சமூகம் மற்றும் சிறுகட்சிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

## இந். ஜார்க்கண்ட் மாநிலத்தில் நக்ஸலைட்டுக்கள் தாக்குதல் 26 பொலிசார் பலி மூவரைக்காணவில்லை

### பொலிசாரின் இருவாகனங்கள் பலத்த சேதம்

(புதுடில்லி)

இந்தியாவின் - ஜார்க்கண்ட் மாநிலத்தில் நேற்று நக்லைலைட்டுக்கள் நடத்திய நிலக்கண்ணிவெடி தாக்குதலில் 26 பொலிசார் கொல்லப்பட்டார்கள். 08 பொலிசார் காயமடைந்துள்ளார்கள்.

இதேவேளை பொலிஸ் சுப்பிரண்ட் பிரவீண்குமார் உட்பட மூன்றுபேரை காணவில்லை என்று ஜார்க்கண்ட் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது இரண்டு பொலிஸ் குழுக்கள் ரோந்துப்பணிக்குச் சென்ற வேளையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இரண்டு பொலிஸ் வாகனங்களும் வெடித்துச்சிதறியுள்ளன.


## 45ஆம் நாள் நினைவில்







| றெங்கசாமி ஜெகதீஸ்வரன் | இராமசாமி சிவசுப்பிரமணியம் | சண்முகநாதன் சதுமுகன் |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| பிறப்பு : | 29-09-1983 | 14-04-1938 | 22-12-1983 |
| இறப்பு : | 25-02-2004 | 26-02-2004 | 27-02-2004 |

அன்பு, பண்பு, பொறுப்பு மிக்கவராய் ஆயப்பகுதியில்
பணியாற்றிவரும் வேளையில்
வீதியில் காத்திருந்த காலனவன்
விதிவசத்தால் பறித்தானே - உம்முயிரை
உடனெடுத்தான் ஓர் உயிரை என அறிந்து
உயிர் துடித்திருந்த வேளையில் - வந்ததே
இறுதிச் சடங்கில் கலந்து திரும்பிய இரு உயிரை
இடைவழியில் பறித்த செய்தி.
உங்கள் உருவங்கள் நிழலாகப் போனாலும்
நினைவுகள் என்றும் எம்முடன் நிலைத்திருக்கும்

பணிப்பாளர்,
பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்.
ஆயப்பகுதி-நிதித்துறை.

(சி-9437)

# வை.கோ. உள்ளிட்ட 9 பேர் மீதான பொடோ வழக்கில் ஆதாரம் எதுவுமில்லை

## பொடோ மறு ஆய்வு மன்றம் தீர்ப்பு

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வை.கோ உட்பட 09 பேர் மீது பொடோ சட்டத்தின் கீழ் தமிழக அரசு தொடுத்திருந்த வழக்கில் பூர்வாங்க ஆதாரம் எதுவுமில்லை என்று மத்திய பொடோ மறு ஆராய்வுக்குழு தெரிவித்துள்ளது.

நீதிபதி ஏ.பி. சகாரியா தலைமையிலான இக்குழு இவ்வழக்கை விசாரித்து வரும் பூந்தமல்லி பொடோ சிறப்பு நீதிமன்றத்தில் சட்டப்படியான இதற்கேற்ப உத்தரவைப்பெற உரிய நடவடிக்கையை எடுக்க அரச வழக்



குரை ஒருக்கு ஆணையிடுமாறு தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

மதுரை திருமங்கலத்தில் பொதுக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக வைகோ. பேசியது பொடோ சட்டத்தின் 21 ஆவது பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் கீழ் வராது என்று அந்தக்குழு தெரிவித்துள்ளது.

பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்காகவும் இந்தச்சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகளில் பூர்வாங்க ஆதாரம் உள்ளதா என்பதை ஆராய்வதற்காகவும் சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் மத்திய பொடோ மறு ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டது தெரிந்ததே.

# ஈராக்கில் இருதென்பகுதி நகரங்கள் ஷியா முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில்

## - அமெ.படைத்தலைமைஒப்புதல்

ஈராக்கில் இருதென்பகுதி நகரங்கள் ஷியா முஸ்லிம் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அமெரிக்கா படைத்தரப்பு ஒப்புக்கொண்டிருக்கிறது.

இந்த நகரங்களின் முழுக்கட்டுப்பாடும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகளின் கைகளில் இல்லை என்று ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படையினருக்கு பொறுப்பான தலைமைத் தளபதி நிக்காடோ தன்சியான ஒப்புக்கொண்டுள்ளார்.

நாஜாப் நகரின் பகுதியான கட்டுப்பாட்டை கிளர்ச்சியாளர்கள் பெற்றுள்ளார்கள் என்றும் குட் நகரில் இருந்த உக்ரெய்ன் துருப்புக்களை விரட்டியடித்து விட்டு அந்த நகரின் முழுக்கட்டுப்பாட்டையும் கிளர்ச்சியாளர்கள் பெற்றிருப்பதாக வும் அவர் கூறியுள்ளார். இதேவேளை பலூஜா நகரம் அமெரிக்க கூட்டணிப்படைகளின் சுற்றிவளைப்பில் இருந்து வருகின்றது. கடந்த திங்கட்கிழமை முதல் அமெரிக்கா பலூஜா மீது தாக்குதலை நடத்த ஆரம்பித்ததை தொடர்ந்து அங்கு குறைந்தது 100 ஈராக்கியர் பலியாகியுள்ளனர்.

# பிரதான கட்சிகளின் ஆதரவின்றி அரசியலமைப்பை மாற்றமுடியாது

## - அரசியல் சட்டவல்லுனர் தெரிவிப்பு

பிரதமர் மகிந்த ராஜபக்ச அடுத்த நான்கு மாதங்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவி அகற்றப்படும். இதற்கமைய அரசியலமைப்பு மாற்றியமைக்கப்படும் என்று கூறியுள்ளார். ஆனால், இரண்டு பிரதான கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலம் இந்த அரசியலமைப்பின் மூலம் எந்தக் கட்சிக்குமே கிடையாது என்று இலங்கையின் அரசியல் சட்டவல்லுநர் எஸ். பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.க்கு இது பற்றிக் கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், அரசியல் யாப்பு நிபந்தனைகளுக்கு முரணாக இவர்கள் அரசியலமைப்பை மாற்ற முற்படும் போது அந்த விடயத்தை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்துக்கு ஒப்படைக்கப்படும். நீதிமன்றம் எத்தகைய நடைமுறை மேற்கொள்ளும் என்பது பற்றி பிரச்சினைகள் இருக்கின்றன. ஏனென்றால், இந்த நாட்டில் நீதித்துறை அரசியல் சார்ந்த நீதித்துறையாக இருக்கின்றது என்பது பலருடைய சந்தேகமாக இருக்கின்றது.

ஆனால், எல்லாவற்றையும் விட முக்கியமான விடயம் எதற்காக அரசியலமைப்பு சீர்திருத்த விடயம் தேவைப்படுகின்றது என்பதுதான்.

அரசியல் யாப்பு சீர்திருத்தம் மூன்று விடயங்களுக்காக இந்த நாட்டிலே தேவைப்படுகின்றது. முதலாவதாக நல்லாட்சியை உத்தரவாதப்படுத்துவது, இரண்டாவது - இனமுரண்பாட்டுத் தீர்வுக்கு உகந்த நடைமுறைகளை அனுசரிக்கக்கூடிய, ஆதரிக்கக்கூடிய தன்மை கொண்ட அரசியலமைப்பு உருவாக்கப்படுவது. மூன்றாவதாக இந்த அரச நிறுவகங்களான நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை, நீதித்துறை ஆகிய இந்த மூன்று துறைகளுக்கு மிடையே சமன்பாடு, விதிமுறைகள விதிக்கப்பட வேண்டும். இது இப்பொழுதுள்ள அரசியல் யாப்பிலே ஒரு சனாதிபதி மேற்கொள்கின்ற நடைமுறைகளை கேள்வி கேட்பதற்கு நீதிமன்றத்துக்கோ பாராளுமன்றத்துக்கோ அதிகாரம் இல்லாததொரு தன்மை இருக்கின்றது.

ஆகவே, இத்தகைய சர்வாதிகார போக்கு கொண்ட ஒரு நிறைவேற்றுத் துறையை மாற்றியமைக்க இந்த மூன்று முக்கிய அடிப்படையிலே தான் ஒரு அரசியலமைப்பு சீர்திருத்தம் தேவை.

ஆனால், சமகாலப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் சமாதான நடைமுறை இப்பொழுது விடுதலைப் புலிகள் முன்வை[illegible] நிருக்கின்ற இடைக்கால நிர்வாக அதிகார சபையென்ற யோசனையோடு அது நிற்கின்றது என்றும் அவர் கூறினார்.

### அமெ...

இந்த உறுப்பினர்களில் கலிபோர்னியாவின் ஆளும் சபை உறுப்பினர் டேவிட் ட்ரீயர், உட்பட்ட மூவர் இடம் பெறுகின்றனர். இவர்கள் இலங்கையில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து பேசவுள்ளனர். (32)

### வாகனம்...

வாகனத்தில் ஏற்றி வந்த தேங்காய்கள் வீதி எங்கும் சிதறிக் காணப்பட்டன சாரதி தர்மபுரம் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் வாகனம் அதிவேகத்தில்வந்து கட்டுப்பாட்டை இழந்ததே விபத்துக்கு காரணம் எனத் தெரியவந்துள்ளது. (14)

### ரத்வத்த...

தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைத்துள்ளது. இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் இன்று தேர்தல் ஆணையாளரிடம் ஒப் படைக்கவுள்ளது. இதிலும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் நியமனம் கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின் றது. இவர் கட்சியின் தேர்தல் வெற்றியில் பங்கேற்கவில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (32)

### ஈ.பி.டி.பி.யின்...

வாளர்கள் மீது அச்சுறுத்தல்களையும் கொலை மிரட்டல்களையும் விடுத்து வருகின்றனர்.

ஈ.பி.டி.பி.யினரது இம்மிரட்டல்களும் அச்சுறுத்தல்களும் மக்கள் தமது மன உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குள்ள சனநாயக உரிமைகளை மீறும் செயல் எனச்சுட்டிக் காட்டி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றனர். (33)

### புலிகளுடன்...

மக்களுடைய துயரங்களை, துன்பங்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய வகையில் தமிழ் மக்களால் இந்தத் தேர்தலில் அளிக்கப்பட்ட ஆணையின் அடிப்படையில் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்தப் பேச்சுவார்த்தை அமைந்து ஒரு இடைக்காலத் தீர்வையாவது தாமதமில்லாமல் ஏற்படுத்தக் கூடிய வகையில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும் அதுதான் 'முக்கியம்.

□ பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறுபான்மை அரசுடன் பேசுவதற்கு புலிகள் தயாராக இருப்பார்கள் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

அது புலிகள் முடிவெடுக்க வேண்டிய விடயம். ஆனால் பேச்சுவார்த்தைகள் முறையாக அமையுமாக இருந்தால்; நாமும் பாராளுமன்றத்தில் 22 பேர் இருக்கின்றோம். ஆனபடியால் எங்களுடைய பங்களிப்பு இருக்கின்ற சமயத்தில் பெரும்பான்மையை பொறுத்தவரையில் பிரச்சினை இருக்க வேண்டிய அவசியமில்லை. நடைபெறுகின்ற பேச்சுவார்த்தைகள் ஆக்க பூர்வமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடைய கோரிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு நிதானமான நல்லசூழல் இருக்குமாக இருந்தால் எமக்கு பாராளுமன்றில் இருக்கின்ற பலத்தின் நிமித்தம் அவர்களுடைய பெரும்பான்மையற்ற நிலையை பிரச்சினைக்குரிய விடயமில்லாமல் மாறலாம்.

□ இலங்கையில் சமாதான நடவடிக்கையில் இந்தியா மேலதிகமாகத் தலையிட வேண்டும் என்று புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ச கருத்துக் குறியிருக்கின்றார் இது குறித்து?

மகிந்த ராஜபக்ச இத்தகைய கருத்தைக் கூறியிருக்கின்றார். அதேவேளை நோர்வே அரசாங்கத்தினுடைய பங்களிப்புத் தொடரவேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவைப் பங்களிக்க வேண்டாம் என்று எவரும் சொல்லமாட்டார்கள். ஆனால் இந்தியா, இலங்கையிலும் உள்ள உண்மையான நிலையை உணர்ந்து தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான உண்மையான அரசியல் தீர்வு, அந்த வகையில் எமது வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் எமது தாயகத்தில் எமக்குப் போதிய சுயாட்சியுடன் ஒரு தீர்வு வரக்கூடியவகையில் இந்தியா ஒரு பங்களிப்பைச் செய்யுமாக இருந்தால் அதை நாங்கள் நிச்சயமாக வரவேற்போம்

- சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமிகோவில் -

# பிரதம குருவை வெளியேற கருணா குழு உத்தரவு!

(மட்டக்களப்பு)

சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோவில் பிரதமகுருவை மட்டக்களப்பை விட்டு வெளியேறுமாறு கருணா குழுவினர் எச்சரித்துள்ளார்.

இதுபோன்ற அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள மாமாங்கேஸ்வரர் ஆலயப் பிரதம குருவிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க[illegible]ட்டுள்ளது.

தற்போது யாழ். வர்த்தகர்கள் படிப்படியாக கடைகளை திறந்துவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடைகளுக்கு இரு பொலிசார் வீதம் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனினும் மிகப்பிரவலமான வர்த்தகங்கள் இன்னமும் மட்டு. திரும்பவில்லை.

# இனந்தெரியாத இளைஞனின் சடலம் வாழைச்சேனையில் பொலிசாரால் மீட்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை கறுவாக்கேணி பகுதியில் அடையாளம் தெரியாத இளைஞர் ஒருவரின் சடலத்தை வாழைச்சேனைப் பொலிசார் நேற்றுக்கண்டுபிடித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றிருக்கலாம். இறந்தவர் 28 வயது மதிக்கத்தக்கவர் என்றும் இவர் நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்ட அடையாளங்கள் இவரது உடலில் காணப்பட்டதாகவும் சிறிலங்காபொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு கிரான் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் வைத்தியசாலையிலிருந்து அறிவித்தலின்றி வெளி[illegible]றியுள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கருணாவிற்கெதிரான சுவரொட்டி ஒட்டியவர் கடத்தப்பட்டார்

## -கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகம்

(அலுவ[illegible]க செய்தியாளர்)

கருணாவிற்கெதிரான சுவரொட்டிகளை விநியோகித்ததாக குற்றஞ் சாட்டி அம்பாறை திருக் கோவிலைச்சேர்ந்த சோதிலிங்கம் என்பவர் கருணாகுழுவினரால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

இறுதியாக அங்கிருந்து கிடைக்கப் பெற்றவிபரங்களின் அடிப்படையில் சோதிலிங்கம் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவருக்கு கடந்த ஒருமாதத்திற்கு முன்பாகவே திருமணம் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அம்பாறை மாவட்டத்திலுள்ள சிலரின் பெயர்களை குறிப்பிட்டு கருணாகுழுவினர் அம்பாறையினை விட்டு உடன் வெளியேறும் வண்ணம் கடிதமூலம் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது. (சோ)

# கிழக்குப் பல்கலைப் பரீட்சை 20ஆம் திகதி ஆரம்பம்

## பதிவாளர் அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பரீட்சைகள் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவுள்ளன. ஏற்கனவே இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 15ஆம் திகதியில் இருந்து இடம்பெறவிருந்தன. எனினும் 20ஆம் திகதி முதல் இந்தப் பரீட்சைகள் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார். இதேவேளை விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி தமது விடுதிகளுக்குத் திரும்புமாறும் பதிவாளர் கேட்டுள்ளார். (32)

### அமெரிக்காத்...

ராஜபக்ச இந்திய உயர்ஸ்தானிகருடன் தமது முதலாவது சந்திப்பை நிகழ்த்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரிட்டன், ஜப்பானியத் தூதுவரையும் மகிந்த ராஜபக்ச நேற்றுச் சந்தித்துள்ளார். (32)

# சாவு அறிவித்தல்

## திரு.நாகரட்ணம் சரவணபவான்

**கல்வயல் சாவகச்சேரியைச் சொந்த முகவரியாகக் கொண்ட திரு.நாகரட்ணம் சரவணபவான் அவர்கள் அகால மரணமாகிவிட்டார். இவர் முன்னாள் இளவேனில் நிறுவனக் கணக்காய்வாளர் ஆவார். அன்னார் நாகரட்ணம் சிவகாம சுந்தரியின் அருமை மகனும் குஞ்சுப்பரந்தன் அமரர் கிருஷ்ண பிள்ளை, சிவபாக்கியத்தின் அன்பு மருமகனும் கௌசல்யாவின் அன்புக்கணவனும் நிலானி, வாசுதன், சேயோன் ஆகியோரின் அருமைத்தந்தையுமாவார். அன்னார் சிவலோகநாதன் (கிளி/ அக்கராயன் அ.த.க பாடசாலை ஆசிரியர்) லோகநாதன், கோமலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார். இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.**

**தகவல்:- மைத்துனர், சிவலோகநாதன்(ஆசிரியர்).**

(4362)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.